மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சுரு மீனைத் தனியாகப் பிடிப்பதில்லை. நம் மாநிலத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 11 இடங்களில்தான் கிடைக்கின்றன. சுரு மீனைத் தனியாகப் பிடிக்காமல். மற்ற மீன்களோடு சேர்ந்து பிடிக்கிருர்கள். அவற்றிலிருந்து சுரு மீனைத் தனித்தெடுத்து இந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

Mr. SPEAKER : Regarding this question relating to shark liver oil, the hon. Member Thiru Martin will ask a supplementary question.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state whether there is any proposal to extend these activities to very good fishing centres like Periathalai and Manapad in Tirunelveli District ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அம்மாதிரி யோசனை இப்பொழுது இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கருத்து தெரிவிப்பாராஞல், அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கு போதுமான மீன் கிடைக்கு மாஞல் அந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மீன் எண்ணெ
யைக் குடிப்பதற்கு நாற்றம் ஏற்படுகிறது. வெளிநாடுகளில் இதை மாத்
மூற் பகல் திரையாகச் செய்து விடுகிருர்கள். ஆகவே, அதுபோலவே நாற்றத்தைப்
10-00 போக்கி, மாத்திரைகளாகச் செய்து தருகிற ஏற்பாடு இருக்கிறதா ?
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே மீன் எண்ணெய் தயாரிக்கப்படுவதில்லை. செப்பனிடப்படாத மீன் எண்ணெய்தான் குறிப்பிட்ட அளவுதான் தயாரிக்கப்படுகிறது. அதுவும் கேரளப் பகுதிகளில்தான் அந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. ஆகவே, அங்கு வேண்டுமாஞல் உங்கள் திட்டத்தை அவர்கள் அமல்படுத்திப் பார்ப்பார்கள். போதுமான மீன்கள் கிடைக்காத காரணத்தால் நாம் மீன் எண்ணெய் தயாரிப்பதில்லை.

தானியங்களை எடைபோட இயந்திரங்கள்.

***122 வினு—திரு. க. இராமமூர்த்தி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள ஒழுங்குப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களில் (Regulated Market Committees) விவசாயிகளின் தானியங்களை எடை போட இயந்திரங்கள் (Weighing Machines) வழங்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தென் ஆற்காடு மாவட்டத்திலே குறிப்பாக திண்டிவனத்திலே வியாபாரிகள் பண்டங்களை எடைபோடும்போது, எடையில் ஏமாற்றுகள் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதனைப் போக்க எடைபோடும் இயந்திரங்கள் மார்க்கெட் கமிட்டிகளில் வைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் கேட்ட கேள்வி தவறுனது. ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியிலும் எடை போடுகின்ற மெசின் வைக்கப்பட்டிருக்கிறது. 1950-ம் வருடத்திய சென்னை மார்க்கெட் கமிட்டி சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியும் ஒரு "வேயிங் மெஷினை"யும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் மார்க்கெட் கமிட்டிக்குப் போகாமலே இந்தத் தகவலைக் கேட்கிருர்கள்.